(*e*) The factory has been working at a profit till 1953–54. The final account of 1954–55 are not yet available with Government. It is too soon to say whether the manufacture of toned milk will result in profit or loss. Every attempt is being made to bring down cost of production and push up sales.

SRI S. RAMALINGAM: What is the difference between reconstituted milk and toned milk and may I know how they are produced?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, toned milk is obtained by toning buffaloes milk by addition of equal quantity of water and proper proportion of skimmed milk powder and is comparable to the quality of fresh cow's milk in total solids and fats. That is how toned milk is prepared.

As for reconstituted milk, it does not taste well and hospitals had been complaining about its taste. Further, it does not contain that nutritive value which is attributed to this toned milk which is compared with the nutritive value of cow's milk, and which is as good as cow's milk.

Ex-tramway workers

* 25 *Q.*—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether the Government have received representations from and on behalf of the ex-tramway workers for the enforcement of the award of the Special Industrial Tribunal as modified by the Labour Appellate Tribunal as published in the *Fort St. George Gazette* of 7th September 1955 against the Receiver (Mr. P. G. Brooks) on behalf of the Debenture Trustees; and

(*b*) if so, the action taken by the Government?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) Yes, Sir.

(*b*) The matter is being examined.

SRI P. RAMAMURTHI: அந்த மனு சர்க்காரிடத்தில் எப்போது தாக்கலானது? அது சம்பந்தமாக முடிவு செய்வதற்கு இன்னும் எவ்வளவு நாள் பிடிக்கும்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: 28-8-1955-ல் கனம் எதிர்கக்ஷி உதவித்தலைவர் அவர்கள் ஒரு மெமொராண்டம் என்னிடம் கொடுத்தார்கள். 15-9-1955-ல் மறுபடியும் எலக்ட்ரிக் டிராம்வேய் வொர்கர்ஸ் அஸோஸியேஷனிலிருந்து அரியர்ஸ் வசூல் செய்யவேண்டுமென்று மனுக் கொடுத்தார்கள். ஆனால் அந்தக் கம்பெனி இப்போது லிக்விடேஷனில் இருக்கிறது. லிக்விடேஷனுக்குப் போன பிறகு கம்பெனீஸ் ஆக்ட் தான் இதற்குப் பொருந்தும். அந்த கம்பெனீஸ் ஆக்ட்படி தொழிலாளருக்கு இருக்கின்ற பாக்கியை முதன்மையாக வசூலிக்கமுடியவில்லை என்று ஒரு அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது. அது சரியல்ல என்பது அரசாங்கத்தினுடைய அபிப்பிராயம். ஆகவே இது பற்றிய சட்ட நிலை என்ன என்பதை பரிசீலனை செய்யவேண்டியிருக்கிறது. அதனால்தான் கொஞ்சம் காலதாமதம் ஆகிறது.

29th September 1955]

Sri S. RAMALINGAM : தொழிலாளருக்குக் கொடுக்கவேண்டிய பாக்கியை, இந்தக் கம்பெனி கலைந்து விட்டதினால், அவர்களுடைய சொத்து மூலதனத்தை கம்பெனியிலிருந்து எடுத்துக்கொண்டு பாக்கிக்கு ஒரு " அட்டாச்மென்ட் " ஆவது போடுவதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுப்பார்களா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அதைப்பற்றி முன்பே கோர்ட்டிலே சில நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. ஆனால் இப்போது லிக்விடேஷனில் இருக்கும்போது இந்த சந்தர்ப்பத்தில் என்ன செய்யக்கூடுமோ அதை செய்வதற்குத்தான் அரசாங்கம் பரிசீலனை செய்து கொண்டுவருகிறது.

Sri M. KALYANASUNDARAM : கம்பெனி லிக்விடேஷனில் இருப்பது வாஸ்தவம்தான். ஆனால் கம்பெனியில் மானேஜராக இருந்து கொண்டே, ரிசீவராகவும், டிபெஞ்சர் டிரஸ்டியாகவும் அவர் இருக்கிறார். டிபெஞ்சர் டிரஸ்டியாக இருப்பதால், கம்பெனியின் சொத்துக்களும் அவர் கையில் இருக்கிறது. அந்தப் பணத்தை வசூலிக்க சர்க்கார் நடவடிக்கை எடுப்பார்களா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அதைப்பற்றி பரிசீலனை செய்யவேண்டும்.

Sri P. RAMAMURTHI : ஆகஸ்டு மாதத்திலும் செப்டம்பர் மாதத்திலும் எதிர்கக்ஷி உப தலைவரிடத்திலிருந்து மனு வந்ததாகவும் அது சம்பந்தமாக ஆலோசனை செய்யப்பட்டதாகவும் கனம் மந்திரியவர்கள் சொல்லுகிறார்கள். ஆனால் அதற்கு முந்திய காலத்திலேயே, சுமார் ஒரு வருஷத்திற்கு முந்தியே, அந்தத் தொழிலாளர்கள் தனிப்பட்ட முறையில் தங்களுக்குப் பணத்தைத் திருப்பித்தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டது உண்மையா ? அப்படியானால் இத்தனை காலம் சர்க்கார் என்ன செய்தார்கள் ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : மனுப்போடும்படி தொழிலாளர்களிடம் சொல்லப்பட்டது. அவர்களும் மனுப்போட்டார்கள். அதற்கு மேல்தான் அதை வசூலிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆனால் உடனே உத்திரவு போட்டு வசூல் செய்வது முடியாத காரியமாக இருந்தது. அதற்குள்ளாக இந்த லிக்விடேஷனிலும் வந்துவிட்டது.

Single-teacher schools

* 2549 *Q*.—**Sri R. S. ARUMUGAM** : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the number of single-teacher schools in Tirunelveli district ; and

(*b*) how many of them are in Tirunelveli taluk?

The Hon. Sri C. SUBRAMANIAM : (*a*) 87.

(*b*) 4.

Sri R. S. ARUMUGAM : எந்த முறையை அனுசரித்து ஓராசிரியர் பள்ளிகள் திறக்கப்பட்டிருக்கின்றன ? நெல்லை ஜில்லாவில் குறைவாக இந்தப் பள்ளிகள் திறக்கப்பட்டிருக்கின்றனவென்பது உண்மையா ? ஜனத் தொகை குறிப்பிட்ட அளவு இருந்தால்தான் திறக்கப்படுவதாயிருந்தாலும் எங்கள் ஜில்லா பற்றி சரியாக கணக்கு கொடுக்கப்படவில்லை என்று எங்களுக்குத் தெரிகிறது. ஆகவே இதைப் புனராலோசனை செய்து இந்த வருஷம் அதிகப்படியான பள்ளிக்கூடங்களைத் திறப்பதற்கு சர்க்கார் யோசிக்குமா ?